<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 218/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.1 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாசர் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |
| Mail ID | : | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 15.06.2022.

<u>**முதல் விசாரணை:**</u>

1. நான் உடுமலையில் வசித்து வருகிறேன். நான் மளிகைக்கடை வைத்துள்ளேன். ஆஜர் 1வது எதிரி எனது கடையில் வேலை பார்த்தார் அவரது மனைவி தான் ஆஜர் 2ம் எதிரி ஆவார். 03.05.2015 அன்று காலை 9.00 மணிக்கு நான் எனது மனைவி மற்றும் எனது குழந்தைகளுடன் உடுமலையில் உள்ள இமானுவேல் சர்ஜ்ஜிக்கு வீட்டை பூட்டிவிட்டு சென்றோம் பின்பு காலை 10.30 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பீரோ திறந்து கிடந்தது.

2. வீட்டில் பார்த்தபோது, நான் பீரோவில் வைத்திருந்த சுமார் 30 வகையான 93 பவுன் மதிப்புள்ள தங்க நகைகள் காணாமல் போய் இருந்தது. உடனே இது குறித்து உடுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்னிடம் காட்டப்படும் **(புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் அந்த புகார் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் பின்பு 20.06.2015ம் தேதி காவல் நிலையத்தில் இருந்து எதிரிகளை பிடித்து வைத்துள்ளதாகவும் பொருட்களை கைப்பற்றி

விட்டதாகவும் அதனால் களவு போன நகைகளை அடையாளம் காட்ட அழைத்ததன் பேரில் காவல் நிலையம் சென்று நகைகளை அடையாளம் காட்டினேன். அப்போது அங்கிருந்த எதிரிகள் தான் இந்த ஆஜர் எதிரிகள் ஆவார். மேலும் எனது வீட்டில் களவு போன நகைகளில் சிறிது நகையை விற்று பணம் ரூ.42,000/- வைத்திருந்ததையும் போலிசார் கைப்பற்றினார்கள். மேற்படி பணம் மற்றும் நகைகளை நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து இடைக்கால பொறுப்பில் பெற்றுக்கொண்டேன். **(சான்று பொருளை குறியீடு செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**